வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: சரவணகுமார்

நாள்: 15.10.2024 நேரம்: மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

செயற்கை நுண்ணறிவை, நெறிமுறை சார்ந்து பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தி உள்ளார்.

புதுச்சேரி கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள அவசரகால உதவி மையம் மற்றும் கட்டுப்பாட்டு அறையை துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாமின் பிறந்த நாள் இன்று உலக மாணவர் தினமாக கொண்டாடப்பட்டது.

கனமழை எச்சரிக்கை காரணமாக, புதுச்சேரி மற்றும் காரைக்காலில் இயங்கும் அனைத்து பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு நாளை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

---

*மோடி 1* (19)

செயற்கை நுண்ணறிவை, நெறிமுறை சார்ந்து பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தி உள்ளார். புதுடெல்லியில், பாரத் மண்டபத்தில் நடைபெறும் உலக தொலை தொடர்பு தர நிர்ணய மாநாட்டை இன்று காலை தொடக்கி வைத்து பேசிய அவர், பாதுகாப்பு, கண்ணியம், மற்றும், சமத்துவம் ஆகியவை செயற்கை நுண்ணறிவு குறித்த விவாதங்களின் மையப் பொருளாக இருக்க வேண்டும் என்றும், தெரிவித்தார். டிஜிட்டல்

தொழில்நுட்பம் தொடர்பாக, உலகளாவிய கட்டமைப்பை உருவாக்க வேண்டியதன் முக்கியத்துவம் குறித்து, ஜி-20 மாநாட்டின் தலைமைப் பொறுப்பின் போது இந்தியா வலியுறுத்தியது குறித்தும் பிரதமர் சுட்டிக் காட்டினார். தொலை தொடர்பு மற்றும் அதுதொடர்பான தொழில்நுட்பங்களில் இந்தியா உலக அளவில் துடிப்பான நாடாக திகழ்கிறது என்றும், இந்தியாவில், 120 கோடி மொபைல் ஃபோன் பயனர்களும், 95 கோடி இணைய தள பயனர்களும் உள்ளனர் என்றார். உலக அளவில் நடைபெறும் டிஜிட்டல் பரிமாற்றங்களில், இந்தியாவில் மட்டும் 40 சதவிகிதத்திற்கும் அதிகமாக டிஜிட்டல் பரிமாற்றங்கள் மேற்கொள்ளப் படுவதாக பிரதமர் தெரிவித்தார். இந்தியாவின் டிஜிட்டல் முன்னேற்றம் 4 தூண்களை அடிப்படையாக கொண்டுள்ளதாக கூறிa அவர், குறைந்த விலையில் மின்னணு சாதனங்கள், நாட்டின் தொலை தூர



பகுதிகளிலும் இணைய வசதி, மலிவான விலையில் மொபைல் டேட்டா, மற்றும், டிஜிட்டல் செயல்பாடுகளுக்கு முன்னுரிமை அளிப்பது என்றும் குறிப்பிட்டார். டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பை வெற்றிகரமாக உருவாக்குவது தொடர்பான அனுபவங்களை, உலகின் பிற நாடுகளுடன் பகிர்ந்து கொள்ள இந்தியா தயாராக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். உலகின் 2 ஆவது 5-G சந்தையாக இந்தியா உருவெடுத்துள்ளது என்றும், 6-G தொழில்நுட்பம் தொடர்பான பணிகளில் இந்தியா தீவிரமாக செயல்பட்டு வருவதாகவும் பிரதமர் கூறினார். கிட்டத்தட்ட நாட்டின் ஒவ்வொரு மாவட்டமும் 5-G நெட்வொர்க்குடன் தற்போது இணைக்கப் பட்டுள்ளன என்றும், தொலை தொடர்புத் துறையில் இந்தியா

அறிமுகப்படுத்தி உள்ள சீர்திருத்தங்களும், புதிய கண்டுபிடிப்புகளும், கற்பனைக்கு எட்டாதவை என்றும், முன் எப்பொழுதும் இல்லாதவை எனவும், பிரதமர் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டார். கடந்த 2014ஆம் ஆண்டில் இந்தியாவில் 2 மொபைல் உற்பத்தி பிரிவுகள் மட்டுமே இருந்தன என்றும், ஆனால் தற்போது நாட்டில், 200க்கும் மேற்பட்ட மொபைல் உற்பத்தி பிரிவுகள் உள்ளன என்றும், தெரிவித்தார். இந்தியா தற்போது மொபைல் ஃபோன்களை ஏற்றுமதி செய்யும் நாடாக முன்னேறி உள்ளது என்றும் பிரதமர் கூறினார். தொழில்நுட்ப தலைமைத்துவத்தில், பெண்களுக்கு ஏராளமான வாய்ப்புகளை இந்தியா உருவாக்கி வருவதாக தெரிவித்த பிரதமர், ஆளில்லா விமானங்களை பயன்படுத்தி விவசாயத்தில்

மோடி 3 (18)

புரட்சியை ஏற்படுத்தி வரும் மத்திய அரசின் நமோ ட்ரோன் தீதி முன் முயற்சி குறித்தும் அவர் குறிப்பிட்டார். இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய தகவல் தொடர்புத் துறை அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா, 6-G, தொழில்நுட்ப வளர்ச்சியில் உலகை வழிநடத்த இந்தியா தற்போது தயாராக உள்ளது என்று கூறினார். இதுதொடர்பாக கடந்த 3 ஆண்டுகளில் இந்தியா 10 மில்லியன் அமெரிக்க டாலருக்கும் அதிகமான தொகையை முதலீடு செய்துள்ளது என்றும், இந்தியாவின் கிராமப்புறங்களிலும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தை கொண்டு செல்லும் வகையில், 7 லட்சம் கிலோ மீட்டர் அளவிற்கு ஃபைபர் இழை கட்டமைப்பு அமைக்கப் பட்டுள்ளதாகவும் கூறினார். கடந்த காலங்களில், தொலை தொடர்பு மக்களை இணைக்கும் ஒரு கருவியாக மட்டுமே பார்க்கப்பட்டது என்றும், ஆனால் தற்போது இந்திய தொலை

தொடர்பு, நாட்டின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுடன் மக்களை இணைக்கிறது என்றும் திரு.சிந்தியா தெரிவித்தார்.

4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் இந்த மாநாடு, முதல்முறையாக தற்போது இந்தியாவில் நடைபெறுகிறது. செயற்கை நுண்ணறிவு, சைபர் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து இம்மாநாட்டில் விவாதிக்கப்படுகிறது. இதில் 190 நாடுகளைச் சேர்ந்த தொலை தொடர்பு நிறுவன அதிகாரிகள், நிபுணர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர்.

--------------------------

*ஆளுநர் ஆய்வு 1 (20)*

புதுச்சேரி கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள அவசரகால உதவி மையம் மற்றும் கட்டுப்பாட்டு அறையை துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன் இன்று பார்வையிட்டார். புதுச்சேரி மற்றும் காரைக்காலில் கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில், மழை பாதிப்புகளை சமாளிக்க எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அவர் கேட்டறிந்தார். புதுச்சேரி வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் செயலர் திரு. ஆஷிஷ் மாதவ்ராவ் மோரே மற்றும் மாவட்ட ஆட்சியர் திரு. குலோத்துங்கன் ஆகியோர் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து துணை நிலை ஆளுநரிடம் விரிவாக எடுத்துரைத்தனர். அதனை தொடர்ந்து புதுச்சேரிக்கு வந்துள்ள பேரிடர் மீட்புக் குழுவினரையும், ஆப்தா மித்ரா பயிற்சி பெற்ற தன்னார்வலர்களையும், துணை நிலை ஆளுநர் சந்தித்து உரையாடினார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பருவ

மழைக் காலத்தை முன்னிட்டு, வாய்க்கால்கள் தூர்வாரும் பணி நடைபெற்று வருகிறது என்றும், கன மழையின் போது தேங்கும் மழை நீரை வெளியேற்ற, அதிக திறன்கொண்ட மோட்டார் இயந்திரங்களை பயன்படுத்த அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப் பட்டுள்ளதாகவும் கூறினார். காரைக்கால் பார்வதீஸ்வரர் கோவில் நில மோசடி விவகாரத்தில், அதிகாரிகள், மற்றவர்கள் என்ற பாரபட்சம் பார்க்காமல், தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

*ஆளுநர் ஆய்வு 2 (3)*

கடந்த 1974ஆம் ஆண்டு கோவில் நிலங்களை கணக்கெடுத்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது என்றும், அதன்படி, கோவில் நிலங்களை கண்டறியும் பணி நடைபெறும் என்றும் தெரிவித்தார்.

-------------------------

*அப்துல்கலாம்* (17)

மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாமின் பிறந்த நாளை நினைவு கூறும் வகையில் இன்று உலக மாணவர் தினம் கொண்டாடப்பட்டது. இதையொட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், வளர்ச்சி அடைந்த இந்தியா என்னும் இலக்கை நோக்கி பயணிப்பதில், டாக்டர் அப்துல்கலாமின் சிந்தனைகள் பேருதவி புரிவதாக தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி அரசு சார்பில் டாக்டர் அப்துல்கலாமின் 93ஆவது பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. இதனையொட்டி, லாஸ்பேட்டை குறிஞ்சி நகரில் உள்ள டாக்டர் அப்துல்கலாம் அறிவியல் மையம் மற்றும் கோளரங்க வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவ சிலைக்கு

துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச் சூழல் துறை செயலர் திரு. ஜவஹர், துணை நிலை ஆளுநரின் செயலர் திரு. நெடுஞ்செழியன் உள்ளிட்டோரும், டாக்டர் அப்துல்கலாமின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்நாளையொட்டி, ராமநாதபுரம் மாவட்டம் பேய்க்கரும்பில் உள்ள டாக்டர் அப்துல்கலாமின் நினைவிடத்தில் மக்கள் மரியாதை செலுத்தினர்.

-------------------------

*வானிலை 1 (19)*

வங்கக் கடலில் நிலவும் 2 புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதிகள் காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில், அடுத்த 2 நாட்களுக்கு மழை நீடிக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் வடகிழக்கு பருவ மழை இன்று தொடங்கி உள்ளதாகவும், இம்மையம் தெரிவித்துள்ளது. இந்நிலையில், வங்கக் கடலில் நிலைக் கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று, நாளை, வடதமிழகம், புதுச்சேரி மற்றும் அதனை ஒட்டிய தெற்கு ஆந்திர கடலோர பகுதிகளை நோக்கி நகரக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும், தெற்கு ஆந்திர கடலோர பகுதிகள், மற்றும், அதனை ஒட்டிய மத்திய மேற்கு வங்கக் கடல் பகுதிகளில் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி உருவாகி உள்ளதாகவும், சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக இன்றும், நாளையும், சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, மற்றும், காஞ்சிபுரம் மாவட்டங்களில் கன முதல் மிக கனமழையும், வேலூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளின் ஒரிரு இடங்களில் கன முதல் மிக கனமழை பெய்யக் கூடும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

*வானிலை 2 (18)*

இதற்கிடையே, பலத்த காற்றுடன் கனமழை பெய்யும் என்ற வானிலை ஆய்வு மையத்தின் எச்சரிக்கை காரணமாக, புதுச்சேரி மீனவர்கள் இன்று 2ஆவது நாளாக மீன் பிடிக்க கடலுக்கு செல்லவில்லை. இதனால், சுமார் 300க்கும் மேற்பட்ட விசை படகுகள், சிறு படகுகள், மற்றும், கட்டுமரங்கள் தேங்காய்த்திட்டு துறைமுகத்தில் பாதுகாப்பாக நிறுத்தி வைக்கப் பட்டுள்ளன. இந்நிலையில், காரைக்கால் மாவட்ட ஆட்சியர் முனைவர் மணிகண்டன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், வடதமிழக மற்றும் புதுச்சேரி கடலோரப் பகுதிகளில் அடுத்த 2 நாட்களுக்கு சூறாவளிக் காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும், இடை இடையே, 65 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக் கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளதால், நாளையும், நாளை மறுநாளும், மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என்றும், தற்போது கடலில் மீன்பிடித்து வரும் படகுகள் உடனடியாக கரைக்கு திரும்ப வேண்டும் என்றும் அறிவுறுத்தி உள்ளார். காரைக்கால் மீனவர்களுக்கு உதவும் வகையில், மீன்வளத் துறை துணை இயக்குநர் அலுவலகத்தில் கட்டுப்பாட்டு அறை இயங்கி வருகிறது என்றும், 04368

222616 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு, காரைக்கால் மீனவர்கள் தகவல்களை தெரிந்து கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

*வானிலை 3 (7)*

புதுச்சேரி மீனவர்கள், தேங்காய்திட்டு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அலுவலகத்தில் முழு நேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு அறைக்கு 0413 2353042 என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு வானிலை குறித்த தகவல்களை பெறலாம் என்று அரசு அறிவித்துள்ளது. மேலும், புதுச்சேரி பேரிடர் மேலாண்மை அலுவலகத்தை 1077 என்ற தொலைபேசி எண்ணில் மீனவர்கள் தொடர்பு கொண்டு தகவல்களை பெறலாம் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

இதற்கிடையே, கனமழை எச்சரிக்கை காரணமாக, புதுச்சேரி மற்றும் காரைக்காலில் இயங்கும் அனைத்து பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு நாளை விடுமுறை அளிக்கப் படுவதாக, கல்வி அமைச்சர் திரு. நமச்சிவாயம் அறிவித்துள்ளார்.

-------------------------

தேர்தல் (11)

மஹாராஷ்ட்ரா மற்றும் ஜார்கண்ட் சட்டசபை தேர்தல் குறித்த அட்டவணையை இந்திய தேர்தல் ஆணையம் இன்று வெளியிட்டுள்ளது. அதன்படி, மஹாராஷ்ட்ராவில் உள்ள 288 சட்டசபை தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக நவம்பர் 20ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது. ஜார்கண்ட் மாநிலத்தில் உள்ள 81 சட்டசபை தொகுதிகளுக்கு, நவம்பர் 13 மற்றும் 20 ஆகிய தேதிகளில் 2 கட்டங்களாக தேர்தல் நடைபெறுகிறது. மேலும் 15 மாநிலங்களில் உள்ள 45 சட்டமன்றத் தொகுதிகள், மற்றும், 2

மக்களவைத் தொகுதிகளுக்கான இடைத் தேர்தல் நவம்பர் 13 மற்றும் 20ஆம் தேதிகளில் நடைபெறும் என்றும், தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் நவம்பர் 23ஆம் தேதி எண்ணப்படும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

---------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

செயற்கை நுண்ணறிவை, நெறிமுறை சார்ந்து பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தி உள்ளார்.

புதுச்சேரி கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள அவசரகால உதவி மையம் மற்றும் கட்டுப்பாட்டு அறையை துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாமின் பிறந்த நாள் இன்று உலக மாணவர் தினமாக கொண்டாடப்பட்டது.

கனமழை எச்சரிக்கை காரணமாக, புதுச்சேரி மற்றும் காரைக்காலில் இயங்கும் அனைத்து பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு நாளை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.